தினமலர் 01 JUL 2022

# தொழிலகங்களில் பெண்கள் 'பாதுகாப்பு பெட்டி'

## திட்டத்தை துவக்கினார் அமைச்சர் கீதாஜீவன்

அவிநாசி, ஜூலை 1–

தொழில் நிறுவனங்களில் பெண்கள் பாதுகாப்புடன் பணிபுரிவதை உறுதி செய்யும் வகையில், 'பாதுகாப்பு பெட்டி' திட்டத்தை சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் கீதா ஜீவன் துவக்கிவைத்தார்.

பணிபுரியும் இடங்களில், பாலியல் துன்புறுத்தலில் இருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டம் குறித்த கருத்தரங்கு மற்றும் தொழில் நிறுவனங்களில், 'பாதுகாப்பு பெட்டி' வைக்கும் அறிமுக நிகழ்ச்சி, திருப்பூர் மாவட்டம், அவிநாசி பழங்கரையில் நடந்தது.

கலெக்டர் வினீத், வரவேற்றார். சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை இயக்குனர் ரத்னா தலைமை வகித்தார். கருத்தரங்கை, செய்தித்துறை அமைச்சர் சாமிநாதன் துவக்கி வைத்தார்.

பின், தொழில் நிறுவன உரிமையாளர்கள், பிரதிநிதிகளுக்கு 'பாதுகாப்பு பெட்டி' வழங்கி, திட்டத்தை துவக்கி வைத்து, அமைச்சர் கீதா ஜீவன் பேசியதாவது:

தன்னாவலர்கள் மூலம், தொழில் நிறுவனங்களில் பெண்களின் பாதுகாப்பு உறுதி செய்வது தொடர் பாக, 1.16 லட்சம் பேர் கையெழுத்திட்ட மனு புகார் வழங்கப்பட்டது. அதனடிப்படையில் தான் இத்திட்டம் கொண்டு வரப் பட்டுள்ளது. 10 பெண்களுக்கு மேல் பணிபுரியும் இடங்களில் 'பாதுகாப்பு பெட்டி' வைக்கப்பட வேண்டும்.

நிறுவனங்களில், நான்கு பேர் கொண்ட 'உள்ளக கமிட்டி' கட்டாயம் அமைக்கப்பட வேண்டும். பெட்டியில் போடப் படும் புகாரை அவர்களை நியாயமான முறையில் கையாண்டு, தீர்வு காண வேண்டும்.

தீர்வுகாணப்படாவிட்டால், கலெக்டர் தலைமையில் செயல்படும் உள்ளூர் கமிட்டியிடம் புகார் தெரிவிக்கலாம்.

புகாரின் தன்மைக்கேற்ப, நிறுவனத்திற்கு முதல் கட்டமாக, 50 ஆயிரம் ரூபாய் அபராதம், தொடர்ந்து புகார் வந்தால் உரிமம் ரத்து செய்யப்படும். புகாருக்குள்ளான நபர் மீது காவல் துறையால் நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு, அவர் பேசினார்.

ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் கயல்விழி, எம்.எல்.ஏ., செல்வராஜ், மேயர் தினேஷ்குமார், திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்க தலைவர் ராஜா சண்முகம் உள்ளிட்ட பலர் பேசினர்.



பணிபுரியும் இடங்களில், பாலியல் துன்புறுத்தலில் இருந்து பெண்களை பாதுகாக்க 'பாதுகாப்பு பெட்டி' வைக்கும் அறிமுக நிகழ்ச்சியை, அமைச்சர்கள் கீதாஜீவன், சாமிநாதன் ஆகியோர் துவக்கி வைத்தனர்.

### 'பெண்கள் வேலைக்கு செல்வது அதிகரிப்பு'

அமைச்சர் கீதாஜீவன் அளித்த பேட்டி:

கடந்த, 2020 – 21ல், உழைக்கும் பெண்களின் சதவீதம், 23.8 சதவீதமாக இருந்தது; கடந்த, பிப்., மாதம் எடுக்கப்பட்ட புள்ளிவிபரப்படி, இது, 25.1 சதவீதமாக உயர்ந்துள்ளது. ஆண்கள், 65.07 சதவீதம், பெண்கள், 54.4 சதவீதம் உழைக்கும் திறன் கொண்டவர்களாக உள்ளனர்.

கடந்தாண்டு, கொரோனாவுக்கு பின், பெண்கள் வேலைக்கு செல்வது அதிகரித்துள்ளது. உழைக்கும் பெண்களின் சதவீதம், 2.3 சதவீதம் உயர்ந்துள்ளது.

நிறுவனங்களில், நிர்ணயிக்கப்பட்ட சம்பளத்தை விட குறைந்த ஊதியம் வழங்கப்படுவதாக புகார் வந்தால், உரிய துறை அமைச்சரின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு, அமைச்சர் கூறினார்.